கிட்டத்தட்ட 4 முறை மத்திய அமைச்சர் அவர்களோடு பேசி, இன்றைக்கு cotton Import Duty-ஐ 11% குறைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படிச் செயல்படுகிறார் என்பது உங்களுக்குத் தெரியும். இது ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஒரே நாளில் முடியாது. நிச்சயமாக, படிப்படியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

127—

துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

***4397—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், மல்லிநாயனப்பள்ளி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மல்லிநாயனப்பள்ளி ஊராட்சி, 9,700 மக்கள்தொகை மட்டுமே கொண்ட ஓர் ஊராட்சியாகும். ஏற்கெனவே இங்கு ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், கடந்த வாரம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, e–Sanjeevani என்கின்ற திட்டம், துணை சுகாதார நிலையங்களில் உள்ள செவிலியர்களின்மூலம் பயனாளிகள் ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவரைத் தொடர்புகொண்டு சிகிச்சை பெறும் வகையில் தொடங்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் அனைத்து கிராமப்புற மக்களும், அவர்கள் சார்ந்த துணை சுகாதார நிலையங்களில் இருந்தே சிகிச்சைபெற்றும், மருந்துகளை பெற்றுக்கொண்டும்

2022 ஏப்ரல் 19]

வருகிறார்கள். எனவே, மல்லிநாயனப்பள்ளி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகலசின்னம்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும், மல்லிநாயனப்பள்ளி துணை சுகாதார நிலையத்திற்கும் இடையே 8 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இந்த 8 கிலோ மீட்டர் தூரம் அவர்கள் நடந்துபோய் மருந்து வாங்க வேண்டுமென்றால் மிக சிரமமாக இருக்கின்றது. எனவே, அங்கே ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று உங்களிடத்தில் நான் ஒரு கோரிக்கை வைக்கிறேன். சட்டங்களை தளர்த்தி, இதற்கான ஒரு திட்டத்தினை நீங்கள் தீட்டி, நிச்சயமாக செய்து தர வேண்டும். இப்போது செயல்பட்டுவரும் சுகாதார நிலையத்தில் காலியாக உள்ள இடைநிலைப் பணியாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்* Grade II *ஆகியோர் நியமிக்கப்படுவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி ஒன்றியத்தைப் பொறுத்தவரை 1,63,131 மக்கள்தொகை கொண்ட ஒன்றியமாக இருக்கிறது. அந்த ஒன்றியத்தில் ஏற்கெனவே ஆலப்பட்டி, பல்ராம்பட்டி, பெல்லாம்பள்ளி, தனம்பட்டி, பெரியமுத்தூர் மற்றும் மேகலசின்னம்பள்ளி ஆகிய ஊராட்சிகளில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்களும், கிருஷ்ணகிரியில் ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது. எனவே, ஏற்கெனவே இருக்கிற மல்லிநாயனப்பள்ளியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை அவரும் அறிவார். விதிமுறைகளின்படி 9,700 என்கின்ற அளவிலேதான் மக்கள்தொகை இருக்கிறது. என்றாலும்கூட அவருடைய விருப்பத்திற்கேற்ப, வேண்டுகோளுக்கேற்ப அந்தச் சுகாதார நிலையத்தை மேம்படுத்துகிற கட்டமைப்புப் பணிகளை*

உருவாக்கி, காலிப் பணியிடங்களும் நிரப்பித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

முற்பகல் 10–55

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, காவேரிப்பட்டினம் பேரூராட்சியிலுள்ள அரசு சமுதாய உடல்நல மையத்தை அதாவது,* Government Community Health Centre–*ஐ அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தினால், ஒருங்கிணைந்த தாய்–சேய் நல மையம் மற்றும் ஒருங்கிணைந்த அவசர சிகிச்சை மையம் செயல்பட ஏதுவாக இருக்கும். மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய சிகிச்சை நிபுணர் மற்றும் சிறுநீரக சிகிச்சை சிறப்பு நிபுணர் ஆகியோர் நியமனம் செய்யப்படுவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத் தேவையான அந்தக் கூடுதல் வசதிகளை, அவர் சொன்ன இரண்டு சிறப்புப் பிரிவுகளையும் உடனடியாக உருவாக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அவை விரைந்து செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.*

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30,000 மக்கள்தொகை கொண்ட கிராம ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கலாம், அதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் சொல்லியிருக்கிறார்கள்.*

2022 ஏப்ரல் 19]

அதனடிப்படையில் பூந்தமல்லி தொகுதி, பூந்தமல்லி ஒன்றியம், காட்டுப்பாக்கம் கிராமம் 30,000–க்கும் மேற்பட்ட மக்கள் வாழக்கூடிய பகுதியாக உள்ளது. அங்கே, துணை சுகாதார நிலையம் இருக்கிறது. அதனை ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30,000 மக்கள்தொகை கொண்ட எல்லா இடங்களிலும் சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம். ஆனாலும்கூட, ஒன்றிய அரசு கடந்த 4 ஆண்டுகளாக எந்த சுகாதார நிலையத்தையும் தமிழக அரசுக்கு ஒதுக்கீடு செய்யவில்லை. இந்த ஆண்டு வணக்கத்திற்குரிய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களின் தீவிர முயற்சியின் காரணமாக, 25 சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே அனுமதி வந்திருக்கின்றது. இதில் எதற்கு முன்னுரிமை தரப்பட வேண்டும் என்பதை அந்தந்த மாவட்ட சுகாதார அலுவலர்களோடு கலந்து பேசி, எந்தப் பகுதி மக்களுக்கு தேவை என்பது அறுதியிட்டு அறிவிக்கப்படவிருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதைப்போல, தேவைப்படின் பூவிருந்தவல்லிக்கு அதற்கான ஏற்பாடுகள் செய்வது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட வெள்ளலூர் பேரூராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அந்தப் பகுதியினுடைய மக்கள்தொகை கிட்டத்தட்ட 64,000 பேர். அருகிலுள்ள பகுதிகளைச் சேர்த்தால் மக்கள்தொகை கிட்டத்தட்ட 75,000 என வரும். அந்தப் பகுதியினுடைய மக்களின் மருத்துவத் தேவையின் அடிப்படையில் அங்கிருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித்*

தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுகாதார ஆய்வாளர்–1, கிராம சுகாதார செவிலியர்–4, பல்நோக்கு சுகாதார ஆய்வாளர்–1 போன்ற பணியிடங்களெல்லாம் காலியாக இருக்கின்றன. அவற்றையும் நிரப்பித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை சுகாதார நிலையங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்துவதும், ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவதும், வட்டார அரசு மருத்துவமனைகளை மாவட்ட அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவது மட்டும் சுகாதாரத் துறையை மேம்படுத்தும் பணிகள் அல்ல. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இன்றைக்கு ஒட்டுமொத்தத் தமிழர்களும் பயன்பெறுகின்ற வகையிலான திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி, மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 'மக்களைத் தேடி மருத்துவம்', 'இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48', 'e–Sanjeevani' போன்ற பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் இருக்கிற ஒவ்வொரு தனி மனிதனுக்குமான ஒரு சுகாதாரம் என்கிற வகையில், மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதைப்போல காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை MRB–ன்மூலம் தொடங்கியிருக்கிறோம். அந்தப் பணிகளெல்லாம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால்,

2022 ஏப்ரல் 19]

இரவு நேரங்களில் மருத்துவர்கள் இல்லை. எனவே, 24 மணி நேரமும் செயல்படும் வகையில் அதனைத் தரமுயர்த்தி இரவிலே மருத்துவர்கள் வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் உயர்த்துதல் குறித்தான பதிலை ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். என்றாலும்கூட, தமிழகத்தில் ஒரே ஒரு மனிதர் இருக்கின்ற ஊர் இருந்தாலும்கூட அங்கே சென்று சிகிச்சை அளிக்க வேண்டும் என்கின்ற வகையில்தான் அண்மையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 389 நடமாடும் வாகனங்களின்மூலம் தொலைதூர கிராமச் சேவை என்கின்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி, இன்றைக்கு எல்லோருக்குமான மருத்துவ சேவை தமிழகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் அது இரவு நேரமாக இருந்தாலும் சரி, பகல் நேரமாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதிக்கு, 24 மணி நேரமும் மருத்துவ சேவை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன்* K. *அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், கோவை வடக்கு தொகுதிக்குட்பட்ட 18–வது வார்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தப் பகுதிக்கு அருகாமையிலுள்ள 47–வது வார்டில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அங்கே அந்த ஆரம்ப சுகாதார நிலையம் அமைவதை அங்குள்ள மக்கள் 'வேண்டாம்' என்கிறார்கள். அந்தப் பகுதியும் என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதிதான். அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை*

18–வது வார்டில் அமைத்துத் தரும்படி, எங்களுடைய மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கோரிக்கையாகக் கொடுத்திருக்கிறேன். இரண்டு மாண்புமிகு அமைச்சர்களும் அருள்கூர்ந்து, அந்த இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தரும்படி தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநகராட்சிப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறு எதுவும் அறிவிக்கப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான அனுமதியை ஒன்றிய அரசிடம் கேட்டுப் பெற்றிருக்கிறார்கள். இந்த 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை எந்தெந்த மாநகராட்சிப் பகுதிகளில் அமைப்பது என்பது குறித்த கருத்துக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவ்வாறு அமைக்கப்படும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'வேண்டாம்' என்று தெரிவித்த இடத்தில் அமையாமலும், அவர் 'வேண்டும்' என்று தெரிவித்த இடத்தில் அமைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

அன்னதானக் கூடம்

***4292—திரு. பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—